குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 50-2015

அ.சா. **2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. வினோத்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சேட்டு |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 34 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.02.2026**

**(1,2,3,6,7,8 எதிரிகள் ஆஜர்)**

**(4,5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :**

நான் வெள்ளக்குட்டை கிராமத்தில் குடியிருந்து கட்டிடட வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தரார் சிவலிங்கத்தை எனக்கு

தெரியும். கடந்த 2015 ஆண்டு நான் புக்காசாகரம் பகுதியில் பள்ளிகூட கட்டிடட வேலை செய்துக்கொண்டு இருக்கும் போது புகார்தராரும் என்னுடன் வேலை பார்த்தார். சிவலிங்கத்திற்கு சொந்தமான கட்டிடடம் கட்ட பயன்படுத்தப்படும் சென்டிரிங் சிட் திருடு போய்விட்டதாக சிவலிங்கம் சொல்லி நான் தெரிந்துக்கொண்டேன். அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாக சிவலிங்கம் சொல்ல தெரிந்துக்கொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :__

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 சிவலிங்கத்தை எனக்கு எப்படி தெரியும் என்றால் நாங்கள் இருவரும் பக்கத்து பக்கத்து கட்டிடத்தில் வேலை செய்து வந்தோம். சிவலிங்கம் புக்காசாகரம் அரசுபள்ளி லேப் கட்டும் வேலை செய்து கொண்டு இருந்தார். நான் அந்த பள்ளியில் அறைகளை கட்டும் வேலை செய்து கொண்டு இருந்தேன். சிவலிங்கம் புகார் கொடுத்தப்போது நானும் அவருடன் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தபோது நான் அங்கு இருந்தேனா என்றால் ஆமாம். போலிசார் என்னை அழைத்து விசாரித்தார்களாக அல்லது நானாக போலிசாரிடம் சொன்னேனா என்றால் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

போலிசார் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள் அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொல்வதைபோல் எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றாலும்

அ.சா.1 எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /−ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 50–2015

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குமாரவேல் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சுப்பிரமணி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 37 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.02.2026**

**(1,2,3,6,7,8 எதிரிகள் ஆஜர்)**

**(4,5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பெரியதள்ளப்பாடி கிராமத்தில் குடியிருந்து கட்டிடட சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தரார் சிவலிங்கத்தை

எனக்கு தெரியும். என்னுடைய கிராமத்திற்கு அருகே குடியிருந்து வருகிறார். கடந்த 2015 ஆண்டு நான் புக்காசாகரம் அரசு மேல்நிலை பள்ளியில் பள்ளியில் கட்டிட சென்டிரிங் வேலை செய்தேன் அப்போது அ.சா.1 சிவலிங்கம், ரவியும் சென்டிரிங் சீட் காணாமல் போய்விட்டதாக எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். அது சம்பந்தமாக சென்டிரிங் சீட் திருடு போன அதே நாள் காலை சுமார் புக்காசாகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் திருடு போன இடத்திற்கு வந்த போலிசார் சம்பயிடத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். நானும், வினோத்குமார் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையெப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான் **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். சம்பவம் நடைப்பெற்றதாக சொல்லும் சமயத்தில் சம்பவயிடத்திற்கு போலிசார் என்னை அழைத்தார்களா அல்லது நானாக சம்பவ இடத்திற்கு வந்தேனா என்றால் நான் சம்பவம் நடைப்பெற்ற பள்ளியில் கட்டிடட வேலை செய்து கொண்டு இருந்தேன் அப்போது போலிசார் வந்தார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பார்வை மகஜரை நான் படித்துப்பார்க்கவில்லை. பார்வை மகஜரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது வரைப்படம் வரைந்தார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான்

கையெப்பம் செய்தேன் என்றாலும் நானாக போலிசாரிடம் எதுவும் சொல்லவில்லை என்றாலும் சரிதான். வழக்கு சம்பவத்தை பற்றியோ எதிரிகளை பற்றி எனக்கு நேரடியாக என்றாலும் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னவிவரங்களை போலிசார் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் போலிசாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 50-2015

அ.சா. 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சாமுண்டி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.முனியப்பன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 34 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.02.2026**

**(1,2,3,6,7,8 எதிரிகள் ஆஜர்)**

**(4,5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :**

நான் கிருஷ்ணகிரியில் குடியிருந்து வருகிறேன். நான் BE படித்து முடித்து Civil Engineer ஆக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள

முதல் சாட்சி கையெப்பம் என்னுடையது ஆகும். கடந்த 2014 ஆண்டு நான் கிருஷ்ணகிரியில் உள்ள கட்டிநாயனப்பள்ளி முருகன் கோவில் அருகே உள்ள மிலிட்ரி மருத்துவமனையில் நான் சில மாதங்கள் பணிப்புரிந்தேன். அப்போது கிருஷ்ணகிரியில் பழையப்பேட்டையில் உள்ள கிருஷ்ணகிரி நகர காவல்நிலையித்தில் நான் இந்த கையெப்பம் செய்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் யாரையும் நான் காவல் நிலையத்தில் பார்க்கவில்லை. நான் வேலை செய்த மிலிட்ரி மருத்துவமனை கட்டிடடத்திற்கான கம்பிகள் திருடு போன வழக்கிற்கு சாட்சியாக கையெழுத்து செய்தேன். நான் கையெப்பம் செய்த ஆவணங்கள் குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பங்கள் முறையை **அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 13.01.2015ம் தேதி இரவு 1.00 மணிக்கு கிருஷ்ணகிரி கட்டிநாயனப்பள்ளி முருகன் கோயில் சந்திப்பு அருகே வாகன தணிக்கையில் ஈடுப்பட்டுக்கொண்டு இருந்த கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய போலிசார் சந்தேகத்தின் பேரில் ஆஜர் எதிரிகளை விசாரித்த போது அவர்கள் திருட்டு குற்றங்களில் ஈடுப்பட்டவர்கள் என தெரியவந்ததால் அவர்களை கைது செய்து விசாரித்த போது ஆஜர் எதிரி வேலு என்பவர் தானாக முன்வந்து

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சாட்சி மூர்த்தி என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்த விவரத்தையும் தொடர்ந்து அதே நாள் பகல் 11.00 மணிக்கு காவேரிபட்டிணம் – பாலக்கோடு செல்லும் சாலையில் முருகன் எனபவருக்கு சொந்தமான இரும்பு கடையில் முருகன் எடுத்து ஆஜர் படுத்த இவ்வழக்கில் தொடர்புடைய மூர்த்தி 165 எண்ணிக்கைகள் கொண்ட சென்டிரிங் சீட்டுகளை போலிசார் கைப்பற்றி தயாரித்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் மூர்த்தி என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் போட்ட விவரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**